**Reg. No. : ........................................**

**Code No. : 7336** **Sub. Code : PTLM 12**

M.A.(CBCS) DEGREE EXAMINATION,
NOVEMBER 2020.

First Semester

Tamil –Core

இலக்கணம் I– தொல்காப்பியம் – எழுத்து

(For those who joined in July 2017 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. நெட்டெழுத்து ஏழும் ————————.

(அ) ஓரெழுத்தொருமொழி

(ஆ) மொழி முதலாகா

(இ) இரண்டிறந்திசைக்கும்

(ஈ) மொழி நிறைவிலவே

2. இதழ்கள் குவிவதால் பிறக்கும் எழுத்துக்கள் எவை?

(அ) அ,ஆ (ஆ) இ,ஈ

(இ) எ,ஏ (ஈ) உ,ஊ,ஒ,ஓ

3. அத்தின் அகரம் ———————— முனை இல்லை

(அ) இகரம் (ஆ) அகரம்

(இ) உகரம் (ஈ) எகரம்

4. ணளவென் புள்ளிமுன் ——————— வெனத் தோன்றும்

(அ) தண (ஆ) டண

(இ) ணன (ஈ) தந

5. நிலா என்னும் சொல் புணருங்கால் பெறும் சாரியை எது?

(அ) அன் (ஆ) இன்

(இ) அம் (ஈ) அத்து

6. ‘அழன்’ என் இறுதிகெட ———————— மிகுமே.

(அ) வல்லெழுத்து (ஆ) மெல்லெழுத்து

(இ) இடையெழுத்து (ஈ) சுட்டெழுத்து

7. மரப்பெயர்க் கிளவிக்கு ——————— சாரியை

(அ) அத்தே (ஆ) அம்மே

(இ) இன்னே (ஈ) அன்னே

8. வண்டு, பெண்டு என்பன ——————— சாரியை பெற்று முடியும்.

(அ) இன் (ஆ) அம்

(இ) இல் (ஈ) அக்கு

9. எழுத்ததிகாரத்தில் எத்தனை நூற்பாக்கள் உள்ளன ?

(அ) 483 (ஆ) 510

(இ) 645 (ஈ) 525

10. ஆய்த எழுத்தின் மாத்திரை அளவு என்ன?

(அ) ஒன்று (ஆ) இரண்டு

(இ) மூன்று (ஈ) அரை

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

11. (அ) மெய்ம்மயக்கம் என்றால் என்ன? உதாரணத்துடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) மொழிக்கு இறுதியில் நிற்கும் எழுத்துக்களைச் சான்றுடன் குறிப்பிடுக.

12. (அ) உருபுப் புணர்ச்சி குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) அளபு, நிறை எண்ணுப் பெயர்கள் தம்மில் புணரும் விதத்தை எடுத்துரைக்க.

13. (அ) அகர ஈற்றுப் புணர்ச்சியினைச் சான்று தந்து நிறுவுக.

(அல்லது)

(ஆ) ஆண், இல்லம், எகின், குமிழ் எனும் மெய்யீறு மரப்பெயர்களின் புணர்ச்சியினை விளக்கியுரைக்க.

14. (அ) குற்றியலுகரத்தின் வகைகளைச் சான்றுடன் எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) எழுத்ததிகாரம் கருவி, செய்கை எனும் வகையுடையது எனும் கூற்றை ஆராய்க.

15. (அ) ஆய்தம் குறித்த தொல்காப்பியரின் கருத்துகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) சொற்களில் எழுத்து வருகை பெறுமிடத்தை தொல்காப்பியம் நன்னூல் வழி விவரிக்க.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கு 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

16. (அ) தமிழ் எழுத்துக்களைத் தொல்காப்பியர் வகைப்படுத்தும் விதத்தை ஆராய்க.

(அல்லது)

(ஆ) பிறப்பியல் உணர்த்தும் செய்திகளை விளக்கியுரைக்க.

17. (அ) சாரியைப் புணர்ச்சியைச் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) தொகை மரபு காட்டும் மூன்று, ஏழாம் வேற்றுமை உருபுகளின் திரிபும் முடிவும் குறித்துக் கட்டுரைக்க

18. (அ) உயிரீறுகள் சாரியை பெறும் விதத்தை உருபியல் வழிப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) மெய்யெழுத்துக்களின் புணர்ச்சி குறித்து விளக்கி எழுதுக.

19. (அ) குற்றுகர எண்ணுப் புணர்ச்சி பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) எழுத்ததிகாரத்தின் அமைப்பு முறையினை விளக்கியுரைக்க.

20. (அ) சார்பெழுத்துக்கள் பற்றித் தொல்காப்பியரும், நன்னூலாரும் வேறுபடும் இடங்களைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) சாரியை குறித்துத் தொல்காப்பியமும் நன்னூலும் கூறும் கருத்துக்களைப் பொருத்திக் காட்டுக.

---